செ.வெ.எண்.167 நாள்.13.03.2018.

# பத்திரிக்கைச் செய்தி

## தொழில் முனைவோர் உதவி மற்றும் சேவை திட்டம்

தமிழக அரசின் தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னை தொழில் முனைவோர் மேம்பாட்டிற்காக பயிற்சியாளர்கள் மூலம் தேவையான ஆலோசனைகள் வழங்கி அவர்களை தொழில் முனைவோர்களாக மாறும் வரை அனைத்து உதவிகளையும் அளிப்பதற்காக திருநெல்வேலி மாவட்ட சிறு மற்றும் குறுந்தொழில் சங்கம் இணைந்து தொழில் முனைவோர் உதவி மற்றும் சேவை திட்டத்தை திருநெல்வேலி மாவட்டத்தில் துவக்க உள்ளது. இத்திட்டத்தின் மூலம் தொழில் முனைவோர் ஊக்குவிப்பு விழிப்புணர்வு, தொழில் தேர்வு செய்தல், திட்ட அறிக்கை தயார் செய்தல், கடனுதவி பெற நிதி நிறுவனங்களுக்கு விண்ணப்பம் செய்து கடன் பெறுவதற்கு உதவி செய்தல் நிரந்தர முதலீடுகள் செய்து தொழில் துவங்குவது வரை, உற்பத்தி செய்து பின் சந்தை வாய்ப்பிற்கு உதவிடுதல், ஏற்கனவே உள்ள தொழில் முனைவோருக்கு சிறப்பாக செயல்பட தேவையான அனைத்து உதவிகளையும் அளிக்கிறது.

இந்த திட்டத்திற்காக தொழில் முனைவோர் மேம்பாடு மற்றும் புத்தாக்க நிறுவனம், சென்னை, திருநெல்வேலி மாவட்ட சிறு மற்றும் குறுந்தொழில் சங்கமும் (நெல்சியா) மற்றும் பொது மேலாளர், மாவட்ட தொழில் மையம், திருநெல்வேலி உடன் இணைந்து ஒரு நாள் தொழில் முனைவோர் விழிப்புணர்வு முகாம் 20.03.2018 அன்று வண்ணார்பேட்டை FX பொறியியற் கல்லூரியின் அரங்கத்தில் காலை 10 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற உள்ளது. புதிதாக தொழில் முனைய ஆர்வமுள்ள இளைஞர்கள், இந்த புதிய திட்டத்தின் கீழ் தங்களை இணைத்துக் கொண்டு இந்த தொடர் தொழில் முனைவோர் உதவியினை பெற்றிட அறிவுறுத்தப்படுகிறார்கள். தொழில் முனைவோர் மேம்பாட்டிற்காக இந்த உதவிகள் அனைத்தும் இலவசமாக வழங்கப்படுகிறது.

எனவே, தொழில் முனைய ஆர்வமுள்ள இளைஞர்கள், திருநெல்வேலி மாவட்ட சிறு மற்றும் குறுந்தொழில் சங்கம் 16/6, முதல் மாடி, டவர் காம்பளக்ஸ், திருவனந்தபுரம் ரோடு, முருகன்குறிச்சி, பாளையங்கோட்டை, கைபேசி எண்.9489160769, 9486694326 மற்றும் தொலைபேசி எண்.0462-250214 மூலம் தொடர்பு கொண்டு முன்பதிவு செய்து இந்த ஒரு நாள் விழிப்புணர்வு முகாமில் கலந்துக் கொண்டு தொடர் உதவிகளை ஆலோசனைகளுடன் பெற அறிவுறுத்தப்படுகிறார்கள். இது தவிர வாரம் தோறும் பாளையங்கோட்டை நெல்சியா அரங்கில் வியாழக்கிழமை மாலை 3.00 மணியிலிருந்து 6.30 மணி வரை தொழில் நுட்ப வல்லுநர்களை கொண்டு தொழில் முனைவோருக்கு தேவையான அனைத்து ஆலோசனைகளும் இலவசமாக வழங்கப்படும்.

விருப்பமுள்ள தொழில் முனைவோர்கள் நேரில் வந்து பயனடையுமாறு திருநெல்வேலி மாவட்ட ஆட்சியர் அழைக்கிறார்.

வெளியிடு : செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், திருநெல்வேலி